ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2018/9 - 2017 මැයි මස 09 වැනි අඟහරුවාදා - 2017.05.09

***2018/9 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை***

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம் (136 ஆம் அத்தியாயம்)***

*(6 (2) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

*(136 ஆம் அத்தியாயம்) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 6 (2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய மேற்படி கட்டளைச் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் செயலாற்றுகின்ற தொழில் மற்றும் தொழிற் சங்க உறவுகள் அமைச்சர் டபிள்யூ. டி. ஜே. செனவிரத்ன ஆகிய நான், இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள கடல் போக்குவரத்து மற்றும் நடைமுறைச் சேவைகள் தொழிலுக்கான, சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகளை ஏற்புடைத்தாக்குகின்ற கட்டளையை இத்தால் ஆக்குகின்றேன்.*

*6 (1) ஆம் பிரிவின் கீழான அத்தகைய கட்டளையை ஆக்குவதற்கு உட்கருதுகின்ற வெளியிடுகைக்கான மேற்படி கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழான தேவைப்பாடு, ஆட்சேபனைகளை கோருவதற்கான அறிவித்தலொன்றுடன் சேர்த்து வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல் மூலம் 2016, ஒற்றோபர் 17 ஆந் திகதிய 1987/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் அதனை வெளியிடுவதன் மூலம் ஈடுசெய்யப்பட்டுள்ளது.*

**டபிள்யூ. டி. ஜே. செனெவிரத்ன,**
தொழில் மற்றும் தொழிற்சங்க
உறவுகள் அமைச்சர்.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 05,
2017, மே 04.

*கட்டளை*

*1941 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் பகுதி II இன் ஏற்பாடுகள் பின்வரும் தொழிலுக்கு ஏற்புடையதாகும் ; அதாவது, கடல் போக்குவரத்து மற்றும் நடைமுறைச் சேவைகள் தொழில்.*

கப்பல் போக்குவரத்து நடைமுறைச் சேவைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய போக்குவரத்து மற்றும் செப்பனிடும் துறை, துறைமுகம் மற்றும் துறைமுகப் போக்குவரத்தில் உள்ளேயும் வெளியேயும் நடைமுறைச் சேவைகளில் ஈடுபட்டுள்ள வேலையாட்கள் இச் சம்பளச் சபையினால் மேவப்படுவார்கள்.

**அட்டவணை**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலையாளர் வகையின் வேலை மற்றும் இந் நிகழ்வுகளுடன் தொடர்புடைய வேலைகளில் ஈடுபட்டுள்ள வேலையாட்கள் கடல் போக்குவரத்து மற்றும் நடைமுறைச் சேவைகள் தொழிலின்கீழ் உள்ளடக்கப்படுவர்.

**தேர்ச்சியற்றோர்**

1. வேலை உதவியாளர்
2. கப்பல் வேலையாள் (கப்பலோட்டம்)
3. கப்பல் சேராங்
4. குழாய் சேராங்
5. கிறீஸ் பூசுபவர்
6. பொருட்கள் அடுக்குபவர்
7. மணி அடிப்பவர்/சமிக்ஞையாளர்/கயிறுகட்டுபவர்
8. உதவியாளராகப் பொறுப்பேற்கும்/ஒப்படைக்கும் அலுவலர்
9. பொருட்கள் எடுத்துச் செல்பவர்

**ஓரளவு தேர்ச்சியுடையோர்**

10. கப்பற்தள பணியாள்
11. சாரதி (நீரில்)
12. கப்பலோட்டப் பணியாள்
13. கென்ட்றி பாரமுயர்த்தி சமிக்ஞையாளர்
14. அங்கியில்லா சுழியோடி
15. கப்பல் கருவிகளைக் கையாள்பவர்
16. திட்டமிடல் உதவியாளர்(முனையம்/கப்பலில்)
17. துறைமேடைப் பணியாளர்
18. பொறுப்பேற்கும்/பொறுப்பளிக்கும் அலுவலர்
19. இயக்க உதவியாளர்

**தேர்ச்சியுடையவர்கள்**

20. விஞ்சியாளர்
21. ஹெச் தண்டல்
22. கப்பல் சரக்குக் கையாளல் உபகரணம் இயக்குபவர்
23. பிரிவு உதவிக் கண்காணிப்பாளர்
24. கொள்கலன் கையாளல் உபகரணம் இயக்குபவர் (QGC/ RTG/ Fork Lift/ Prime Movers/ Yard Tracters/ Crane/ Oil Pumps)
25. பொறியியல் அலுவலர்
26. இயந்திரஅறை நுட்பவியலாளர்
27. கடற் சுழியோடி
28. பல்தேர்ச்சி படகு இயக்குபவர்
29. நங்கூரத்தள ஓவசியர்
30. வெளிச்சவீட்டுப் பொறுப்பாளர்
31. உதவி இயக்குநர்
32. உள்ளக முனையங்களுக்கிடையிலான இணைப்பாளர்
33. டெக்/வாப்பு கட்டுப்பாட்டாளர்கள்
34. முனையகட்டுப்பாட்டாளர்கள்
35. முனைய திட்டமிடுபவர்
36. இயக்கக் கட்டுப்பாட்டாளர்

37. கொச்சன்
38. சாரதி
39. உதவி டக்கள அதிபர் (டக் மற்றும் லான்சி)
40. போசன்
41. முகாமைத்துவ உதவியாளர் (கையாளல்)
42. சறுக்குவழிக் கட்டுப்பாட்டாளர்
43. கப்பற் கையாளல் கட்டுப்பாட்டாளர் (திட்டமிடல் எழுதுவினைஞர்)
44. கடற்கலப் போக்குவரத்து இணைப்பாளர்
45. பல்தேர்ச்சி தொழில்நுட்பவியலாளர்

***குறிப்பு*** -. அலுவலக வேலையாட்கள், பொறியியல் தொழிலில் உள்ள வேலையாட்கள் மற்றும் மோட்டார் போக்குவரத்துத் தொழிலில் ஈடுபட்டுள்ள வேலையாட்கள் ஏதாவது வேறு கட்டளை அல்லது ஏற்பாடுகளினால் மேவப்படுபவர்கள் கடற்றொழில் போக்குவரத்து மற்றும் அதனைச் செயற்படுத்தும் சேவைகள் தொழிலுக்குரிய சம்பளச்சபையால் மேவப்படமாட்டார்கள். இருந்த போதிலும் நேரடியாக அல்லது மறைமுகமாக அல்லது வேறு எந்த வகையிலேனும் மேலே குறிப்பிட்டுள்ள வேலையாளர் வகைகளில் தொடர்பான வேலைகளைச் செய்யும் ஒவ்வொரு வேலையாளும் சொல்லப்பட்ட சம்பளச் சபையால் மேவப்படுவர்.

5-679